Political Sufferers' Association.

*255 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have examined the request contained in the Memorandum submitted to the Chief Minister by the Political Sufferers' Association of the Tirunelveli district recently; and

(*b*) if so, the details of action taken on the various suggestions contained in the Memorandum?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) The memorandum is being examined by the Government.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Has any representation been made on behalf of Political Sufferers to provide pension for them and will the Government sympathetically consider the request made by the Political Sufferers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I said that the memorandum was being examined. The Government have been examining what kind of relief may be given to political sufferers who have taken part in the freedom movement and who are now in a destitute condition.

திரு. எம். எஸ். செல்வராஜன்: *அந்த மெமோராண்டத்தில் எல்லா அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்களா? அப்படியானால் இப்போது மத்திய அரசாங்கத்திலிருந்து வழங்குவது போக மீதிப் பேர்களுக்கும் ராஜ்ய அரசாங்கத்திலிருந்தேனும் கொடுக்க யோசனை செய்யப்படுமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அரசியல் தியாகிகளுடைய குழந்தைகளுக்கு இப்போது ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டுத்தான் வருகிறது.*

திரு. வை. சங்கரன்: *இப்போதுள்ள நிலையில் மத்திய சர்க்கார் எஜுகேஷன் கன்ஸெஷன் கொடுக்கும்போது பொலிடிகல் ஸஃபரர் என்றால் ஆறு மாதங்களுக்கு மேல் சிறைவாசம் செய்திருந்தால்தான் அவர் பொலிடிகல் ஸஃபரர் என்ற வியாக்கியானம் இருக்கிறது. ஆறு மாதம் சிறையில் இருந்திருந்தால்தான் அவர்கள் பொலிடிகல் ஸஃபரர் என்ற முறையில் விதியிலிருக்கிறது. அந்த விதியைத் தளர்த்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அரசியல் தியாகிகள் என்றால் யார் அரசியல் தியாகியாகக் கருதப்படுவது, அவர்களுக்கு என்ன உதவி அளிப்பது என்பதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.*